61

வைத்திய சந்திரிகா

561
3/59

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

விகாரி
ஆடி - ஆவணி

AUGUST
1959

குதி 21
தி 8

Vol. 21
No. 8

REGISTRAR OF BOOKS
10 AUG 1959
MADRAS

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.

உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

கொழும்புத் திட்ட நாடுகளின் ஆதரவில் ஆசிய ஆயுர்வேத ஆரோக்ய ஸ்தாபனங்கள்	3
…கச்வாஸம்	7
…ந்தர சிகித்ஸை	10
…திகள்	14
…ரச் சொற்கள் அகராதி (தனி)	33—36
…ாகரத்னகரம் — (தனி)	9—12

Annual
Subscription
Rs. 5/-

SL
3ணா211, N59
N59·21·8
188828.

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

நீலீபிருங்காதி தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கும் எல்லா கால நிலைகளிலும் ஆரோக்கியமான கூந்தல் வளத்திற்கும் மெருகுக்கும் அனைவராலும் பாராட்டப் பட்டது.

தயாரிப்பாளர்கள் :

ஆர்ய வைத்தியசாலா

(ஸ்தாபிதம் : 1902)

கோட்டக்கல். (கோழிக்கோடு ஜில்லா)

கிளைகள் : கோழிக்கோடு (போன் 155) திரூர் (போன் 31), பாலக்காடு (போன் 104), ஈரோடு, மற்றும் எர்ணாகுளம். விற்பனை டிப்போ : பாலக்காடு (வெட்டிகுளம் ரோட்).

600-க்கு மேற்பட்ட தரமான ஆயுர்வேத மருந்துகள் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகின்றன. எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் சிறந்த ஆயுர்வேத சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. நவரக்கிழி, தாரா, பிழிச்சல் முதலான விசேஷ கேரள முறைகளும் கோட்டக்கல்லில் எங்கள் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங் ஹோமில்** மிதமான கட்டணங்களில் அளிக்கப்படுகின்றன. நேரில் ஆலோசித்தோ அல்லது தபால் மூலமோ, எமது பிரதான வைத்தியர் சிகித்சையும், மருந்தும் அளிப்பார்.

மேல் விவரங்களுக்கு தயவு செய்து

மானேஜிங் டிரஸ்டிக்கு எழுதவும்.

A WORD OF ADVICE

If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with Un-Known and Un-Reliable Firms

Have your requirments from :—

KALIA BROTHERS (Regd.)

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA.

ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங் காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரீக்ஷை செய்ய வேண்டா.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

5 C/9, ரோஹ்தாக் ரோடு, புது டில்லி—5.

அல்லது

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா:	*ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:*
28, A. தென்னூர் ரோடு,	31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 1.	*திருச்சிராப்பள்ளி 2.*

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

எமது விசேஷ மருந்துகள்

4. சந்திரிகாவலேஹம்.

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, *மானேஜிங் டைரெக்டர்*

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 21	விகாரி – ஆடி – ஆவணி	பகுதி 8
Vol. 21	AUGUST 1959	No. 8

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

கொழும்புத் திட்ட நாடுகளின் ஆதரவில் ஆசிய ஆயுர்வேத ஆரோக்ய ஸ்தாபனம்.

வைத்யரத்ன பண்டிட் சிவசர்மா அவர்கள் இலங்கை சர்க்காருக்கு ஆயுர்வேத விஷயமான ஆலோசனைகளை அளிக்க ஆலோசனையாளராக இந்திய மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் பதவி வகிக்கிறார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். பாகிஸ்தான், இலங்கை, பர்மா, ஸியாம், இண்டோனேஷியா, காம்போடியா, வியட்நாம், நேபாளம், பூதான், ஸிக்கிம் முதலிய இந்தியாவின் பிராசீன காலத் தொடர்பு கொண்டுள்ள நாடுகளில் உள்ள பிராசீன சிகித்ஸை முறைகளை ஆராய வழி வகுப்பது ஆசிய நாடுகளின் ஸுகாதார முன்னேற்றத்திற்குச் சிறந்த அடிகோலியாகும். இவ்வழியில் முன் செல்ல ஆசிய நாடுகளின் கேந்திரஸ்தானமாக விளங்கும் இலங்கையில் ஒரு புது முயற்சி உருவாக்கப் படுகின்றது. கொழும்புத் திட்ட நாடுகளின் ஒத்துழைப்பையும் பாண்டுங் நாடுகளின் ஒத்துழைப்பையும்

188878.

எதிர்பார்த்து அகில ஆசிய ஆயுர்வேத ஆரோக்ய ஸ்தாபனம் ஒன்றை (Asian Ayurvedic Health Organisation AAHO) ஏற்பாடு செய்வதற்காகத் திட்டம் ஒன்றை இலங்கை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த முயற்சியை உருவாக்கும் முழுப் பொறுப்பையும் வைத்ய ரத்ன பண்டிட் ஸ்ரீ சிவசர்மா அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இதற்கான திட்டங்களையும் ஸ்ரீ சிவசர்மா இலங்கை சர்க்காரிடம் சமர்ப்பித்துள்ளாரென்றும், அதை ஏற்று இதற்கான ஆரம்பச் செலவுகளுக்காக இருபது லக்ஷ ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிய நாடுகளின் பிரதான மந்திரிகளுக்கும் ஆரோக்ய மந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இது விஷயமான கடிதப்போக்குவரத்து நடைபெற்றுவருவதாயும் தெரிகிறது.

இந்தியாவுக்குக் கிடைக்க வேண்டிய இந்த வாய்ப்பு இன்று இலங்கைக்குக் கிடைத்துள்ளது. நாட்டு வைத்ய முறைகள் நன்கு வழக்கத்திலுள்ள நாடு இந்தியாவைப் போன்று வேறு நாடு இல்லை. ஆயினும் இந்திய அரசாங்கம் தன் நாட்டு முறைகளைச் சீரிய முறையில் பாதுகாத்து வளர்க்க முன் வரவில்லை. அதை உணர்ந்த ஸ்ரீ சிவசர்மா அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பயன் படுத்திக் கொண்டு இந்த ஸ்தாபன நிறுவன விஷயமாக இலங்கையைத் தூண்டிவிட்டுள்ளது அவர் ஆயுர்வேதத்திற்குச் செய்துள்ள பெரும்பணியாகும். இதற்கான ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அளித்து இத்திட்டம் செயலாக்கப்பெற வழிவகுப்பது நமது கடமையாகும். இதில் தனிப்பட்ட நபரின் மேலுள்ள விருப்பு வெறுப்புகளுக்கும் உள் விரோதத்திற்கும் இடம் அளித்து காரியத்திற்கு இடையூறு விளைவிக்காதிருப்பதும் ஒரு பெரும் சேவையாகும்.

ஒரே விதமான வாய்ப்புக்கள் மறுபடி ஏற்படுவதே இல்லை. கிடைத்த வாய்ப்புக்களைப் பூர்ணமாகப் பயன் படுத்திக் கொள்ளாதிருப்பதும் பின்னர் வருந்துவதும் மனிதனின் பகுத்தறிவுக்கு அழகல்ல. இவ்வாய்ப்பை நழுவ விட்டதும் அச்செய்கைக்கு பல்வேறான காரணங்கள் சொல்லி உடனடியாகத் தம்மைத் தேற்றிக் கொள்வாருண்டு. ஆனால் அவரும் பின்னர் தம்மையே நொந்து கொள்ள நேரிடும்.

இந்தத் திட்டம் நிறைவேறினல் பல நன்மைகளுண்டு. பாரத நாட்டின் பண்பாடு இந்த ஆசிய நாடுகள் ஒவ்வொன்றி லும் பிரதிபலித்த நாளுண்டு. அக்காலத்தில் ஆயுர்வேதத்தின் பல்வேறு பகுதிகளின் அறிவும் ஆங்காங்கு தங்கி நிலேத்த துண்டு. இவைகளே எல்லாம் ஆராய்ந்து ஆயுர்வேதம் ஒரு நாள் அடைந்திருந்த பூர்ணத்துவத்தை மீண்டும் பெற வழிவகுப் பது இன்றைய வைத்ய சமூகத்தின் முதற் கடமையாகும். தனிப்பட்ட வைத்யன் ஒருவன் அந்தந்த நாடுகளில் உள்ள பிராசீன வைத்ய முறைகளே எல்லாம் அறிந்து ஆயுர்வேதத் தைப் பூர்ணமாக்க முற்படுவது இன்றைய சூழ் நிலேயில் எளிதல்ல, அதற்கு இவ்வித ராஜ்ய சமூகங்களின் ஒத்துழைப் புடன் நிறைவேறும் திட்டம் பெரிதும் பயன்படும். அதனல் இதற்கான வழிவகுக்க வைத்ய சமூகம் முன் வர வேண்டும்.

கஸ்தூரி, கோரோசனே, பச்சகர்பூரம், குங்குமப்பூ முதலியவைகளுக்கு நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS.

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs Merchants

LUDHIANA. PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

தமகச்வாஸம்.

(வைத்ய. ராமசிரோமணி த்விவேதி. ஆயுர்வேதாசார்ய)

[பம்பாயிலுள்ள பொத்தார் ஆயுர்வேதசாலையில் பிரதான சிகித்ஸகராக இருக்கும் இவர் தமகச்வாஸத்தில் தமது அனுபவத்தை ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் வெளியிட்டுள்ளதை இங்கு தருகிறோம். தமகச்வாஸம் என்பது ஆஸ்துமா வகுப்பிலுள்ள சுவாஸகாஸ யோகத்தைக் குறிப்பிடுகின்றது. — ஆசிரியர்.]

தமகச்வாஸம் என்பது முக்யமாக கபவாதப் பிரகோபத்தினால் ஏற்படுகின்றது. கபமும் வாயுவும் கெட்டு அக்னிமந்தத்தால் ஆஹாரம பூர்ணமாகப் பாகமாகாமல் ரஸதாதுவாக மாறும்போது அபக்வமான ரஸமே உட்சென்று, அபக்வரஸத்தினின்றும் பிரியும் மலமான கபம் அதிகமாவதாலும் உணவு ஜீர்ணமாகாமல் பெருங்குடலில் சேரும் போது மலமாகப் பிரியும் தருணத்தில் வாயுவும் அதிகமாவதாலும் இந்நோய் ஏற்படுகின்றது. பித்தஸ்தானத்தில் வாதகபங்களின் தோஷம் அதிகமாவதால் இது ஏற்படுகின்றது— என சரகர் கூறுவது ஜீர்ணசமயத்தில் ஏற்படும் நிலைகேட்டை விளக்கும்.

कफवातात्मकावेतौ पित्तस्थानसमुद्भवौ ।

இந்நோய் ஒருவகையில் வாதப்ரதானமாகவும் வேறுவகையில் கபப்பிரதானமாகவும் காணப்படுகின்றது. இதைத் தவிர பித்தானுபந்தத்தால் ஏற்படும் பிரதமகச்வாஸம் ஒன்று உண்டு. ஆக இது மூன்று வகைப்படுகின்றது. சிகித்ஸை நோக்கில் வேறு இருவகையாகவும் பிரிக்கலாம். துர்பலனுக்கு ஏற்படுவது, பலவானுக்கு ஏற்படுவது என.

சரகர் இதை விவரிக்கும்போது கூறும் முறை கவனிக்கத்தக்கது. “ச்வாஸரோகி இருவகைப்படுவான், பலவான் துர்பலன் என. மறுபடியும் இரு வகைப்படுவான் கபாதிகன் வாதாதிகன் என. கபாதிகனுக்கு முதலில் வமனமும் பிறகு விரேசனமும் கொடுக்க வேண்டும். பத்ய உணவுகளுடன் தூமபானம், கபத்தை இளக்கும் லேஹங்கள் இவைகளைக் கொடுக்கலாம். வாதத்திலும் துர்பலனுக்கும் பாலனுக்கும் கிழவனுக்கும் ஏற்படும் நோயிலும்

வாத சமனமான ஔஷதங்களும் நெய்ப்பு உண்டாக்குபவை களான கஞ்சி ஸூப்பு முதலியவைகளும் கொடுத்து சரிப்படுத்த வேண்டும்.''
சரக சிகித்ஸை அத் 17.

மற்றொரு சிகித்ஸாயுக்தியையும் கவனிக்க வேண்டும். வாயுவிற்கு ஏற்படும் ஆவரணத்தைக் கவனித்தல் நல்லது. கபப் பிரதான தமகத்தில் பிராணவாயுவால் உதானவாயுவிற்கும் வாத பிரதான தமகத்தில் உதானத்தால் அபானவாயுவிற்கும் ஆவரணம் ஏற்படுகின்றது. இதன் அறிகுறிகள் பின்வருமாறு:

தலைவலி, சளி, மூச்சுத்திணறல், மார்வலி, வாய் உலர்தல், இவை பிராணவாயுவால் உதானன் ஆவரணமடைவதன் குறிகள். இவைகளில் மார்பகம், தலை இடங்களில் உள்ள கபவாதங்கள் சீரடைய வமனம் போன்ற சிகித்ஸை செய்தல் வேண்டும். உதானத்தால் அபானனுக்கு ஆவரணம் ஏற்படும் போது வாந்தி, ச்வாஸம் முதலியவை ஏற்படும். இங்கு பஸ்தி அபான ஸ்தலங்களில் வாதானுலோமன சிகித்ஸை உணவு வகை பயன்படும்.

வியாதியின் ஸம்பிராப்தியைப் பரீசீலிக்கும் போது அக்னிமந்தம், வாத பிரகோபம், கபப்ரகோபம், வாயுவின் எதிர்நோக்கு (பிரதிலோமகதி) வாயு கெட்ட ச்வாஸாசய (பிராணவஹஸ்ரோதஸ்) த்தில் தங்குதல், வாயுவால் கபம் வெளிக்கிளப்பப்பட்டு வழியடைத்திருத்தல், அதனால் மூச்சுத்திணறுதல் இவை கவனிக்கத் தக்கவை. இந்த ஸம்பிராப்தியை ஒட்டி, இதில் கபம் இளகவும் வெளியாகவும் வரயு அனுலோம கதி அடைந்து சமனமடையவும் பித்தம் ஜீர்ணசக்தி நேராகவும் ஸ்ரோதஸ்ஸுகளில் ஏற்பட்டுள்ள அடைப்பு விலகவும் சிகித்ஸை அவசியமாகின்றது.

இதில் நான் கையாண்ட சிகித்ஸை வழிகளை பின்னர் குறிப்பிட விரும்புகிறேன்.

கபப்பிரதான தமக ச்வாஸ சிகித்ஸை

1. வேகமதிகமாக இருக்கும் போது நல்லெண்ணெய்யில் உப்பைப் போட்டு சூடாக்கி மார்பகத்தில் தடவி ஒத்தடம்.

2. கபம் இளகி வாதம் அனுலோமமாகும் வரை அதிமதுரமும் கண்டங்கத்திரியும் இடித்துப் போட்டுக் கஷாயம் செய்து ஆவியைக் குழாய் வழியே மார்பகத்தின் மேல் படும்படி செய்து நாடீஸ்வேதம் கொடுத்தல்.

3. வாதானுலோமனம் ஏற்பட்டதும் ஆங்காங்கு ஸ்ரோதஸ்ஸுகளில் ஒட்டிக் கெட்டியாகவிருக்கும் கபம் வெளியாக உத்க்லேசனமான தயிர் அன்னம் உண்ணுதல்.

4. கபம் உத்க்லேசனமானதும் ஒருமணிகழித்து மலங்காரைக்காய் கஷாயம் 4 அவுன்ஸ், திப்பிலித்தூள் ½ தோலா, இந்துப்பு ½ தோலா தேன் 2 தோலா சேர்த்துச் சாப்பிட்டு கழுத்துவரை நிரம்பும் வகையில் வென்னீர் குடித்தல். இதனால் நன்கு வாந்தியாகி கபம் வெளிப்படும்.

5. கபம் வெளியாகி 2 மணி நேரம் கழித்து சரகரின் தூமவர்த்தியைப் புகைபிடித்தல்.

6. இதன் பிறகு தினப் காலை 7 நாட்கள் வரை சித்ரககிருதம்.

7. அந்த 7 நாட்களும் சித்ரககிருதம் சாப்பிட்டபின் நொச்சி இலை சேர்த்த வென்னீரில் வேது பிடித்தல்.

8. உடன் சிவாசூர்ணம் சாப்பிட்டு மலமிளக்கிக்கொள்ளுதல்.

9. வேகமதிகமாக இருக்கும் போது ஸிதோபலாதி சூர்ணத்தையும் அதிமதுரத்தூளையும் சதுர்புஜரஸத்தையும் தேனும் துளசிச்சாறும் சேர்த்து 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒரு ஸ்பூன் சாப்பிடுதல் வேகம் தணியும் வரை.

10. பிறகு ரஸாயனமாக சதுர்புஜரஸம் 2 யவம், திரிபலா சூர்ணம் 15 யவம், தேனும் துளசிச்சாறும் சேர்த்து தினம் இரு முறை காலை மாலை அனுபானமாக பார்ங்க்யாதி கஷாயம் 2 அவுன்ஸ். தசமூலாரிஷ்டம் 2 வேளை உணவிற்குப் பின். லவங்காதி வடி அவசியத்திற்கேற்றவாறு வாயிலடக்கிக்கொள்ள.

வாதப்பிரதான தமகசிகித்ஸை

1. வேக காலத்தில் நல்லெண்ணெய்யையும் உப்பையும் சூடாக்கித் தேய்த்துக் கொள்ளுதல்.

2. அமிருதப்ராச கிருதம் அல்லது நாராயண தைலத்தை சூடான பாலுடன் வேக காலத்தில் 2 ஸ்பூன் அளவு அடிக்கடி.

3. ஆளி விதை இந்துப்பு கலந்து வேக வைத்துச் சூட்டுடன் கட்டுதல், அல்லது சிற்றுமணக்கெண்ணெய் தடவி ஒத்தடம் கொடுத்தல்.

4. வேகம் குறைந்ததும் பாலும் சர்க்கரையும் கப உத்க்லேசனத்திற்காக.

5. தூம வர்த்தி நெய்யில் நனைத்துப் புகை பிடித்தல்.

6. கர்பூராதி சூர்ணம் வாஸாபானகத்துடன் அடிக்கடி வேகம் குறைவதற்காக.

7. அதிமதுரத்தூளுடன் சதுர்புஜரஸம் அடிக்கடி.

8. வாயு அநுலோமனமாவதற்காக பிருஹத்ஸைந்தவாதி தைலம் சூடான பாலுடன் காலையில்.

9. ரஸாயனமாக சதுர்புஜரஸம் 2 யவம் கர்பூராதி சூர்ணம் 15 யவம் தினம் காலை மாலை தேனில். அனுபானமாக பார்ங்கியாதி கஷாயம், அமிருதப்ராசகிருதம் தினம் காலையில், பிருஹத்ஸைந்தவாதி தைலம் 2 அவுன்ஸ் மாத்ராபஸ்தியாக.

பொதுவாக ஸ்நேஹனமும் ஸ்வேதனமும் செய்விப்பதால் வாதானுலோமனம் ஏற்படுகின்றது. சுவாஸ வேகம் குறைகின்றது. சமனமருந்துகளால் உடல் வலிவு மிகுந்து காணும், சுவாஸத்தில் பித்தாநுபந்தமு மிருந்தால் ச்வாஸ வேகத்தைக் குறைப்பது மிகக் கடினம். ரோகிக்கு ஒத்தடம் கொடுக்க முடியாது. கொடுக்கவும் கூடாது. இவர்களுக்கு அடிக்கடி 2 அவுன்ஸ் சூடான பாலுடன் க்ளுகோஸ் அல்லது சர்க்கரை சேர்த்து, 2 டீஸ்பூன் நாராயண தைலம் சேர்த்துக் கொடுக்க நல்ல குணம் கிடைக்கின்றது. வாயுவும் கபமும் இதனால் குறைகின்றன. பித்தத்திற்கும் கெடுதல் இல்லை. பார்ங்கியாதி (32 சரக்குள்ளது) கஷாயச் சரக்குகளுடன ஸம அளவு ஆளிவிதையும் சேர்த்துக் கஷாயம் செய்து கொடுப்பதால் வாத கபானுலோமனம் நன்கு ஆகின்றது.

ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஜூலை மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள்	756	2061
பெண்கள்	883	
சிறுவர்	422	

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் எஸ்டேட்.

பகந்தர சிகித்ஸை

(ராஜவைத்ய ஸத்யதேவ சர்மா, ஜோத்பூர்)

[ராஜவைத்ய ஸத்ய தேவசர்மா ஜோத்பூர் ராஜ்யத்திலுள்ள திரி போலியாவில் மூல பகந்தர (பவுத்திர) நோய்களில் விசேஷக்ஞ (Specialist) ராக இருப்பவர். இவர் தாம் அனுஷ்டிக்கும் பகந்தரத்தின் சிகித்ஸை முறைகளை ஆயுர்வேத ஸம்மேளன பத்திரிகையில் வெளியிட்டுள்ளதை இங்குச் சுருக்கித் தருகிறோம். பகந்தரம் வந்த இடத்தை உணர்ச்சியறச் செய்யும் சிகித்ஸைக்கு உதவும் இரு ஸத்வங்களைத் தவிர மற்றவை யாரும் செய்து பார்க்கக்கூடியவையே.]

ஐந்து வகை பகந்தர நோய்களின் விவரணம் நமது நூல்களில் காணப்படுகிறது. நூற்றுக்கணக்கான துவாரங்களுடன் கூடிய சதபோநகம், ஒட்டகைக்கழுத்துப்போல் வெளியே நீண்டு நிற்கும் உஷ்ட்ரக்ரீவம், எப்பொழுதும் கசிவுடனிருக்கும் பரிஸ்ராவீ. துவாரம் நேராக இல்லாமல் சங்கின் சுழல் போல வளைந்து வளைந்து செல்லும் சம்பூகாவர்த்தம் – இந்த வகைப்பட்ட நோய்கள் ஆரம்பித்தபோதே கவனிக்கப்படாததாலோ. கிருமிகள் உத்பத்தியாவதாலோ உள்புறம் புரையோடும் உன்மார்க்கீ என்ற இவ்வைவகை பகந்தரங்களும் இன்றும் அனுபவத்தில் காணப்படுகின்றன.

குதப்ரதேசத்தில் காணப்படும் புரையே (நாடிவ்ரணம்) பகந்தரமாகும். இப்புரை குதவாயின் வெளிப்புறத்தில் பக்கத்தில் ஆரம்பித்து குத வழியில் உட்புறம் வரை சென்றிருந்தால் பூர்ணமான (complete rectal fistula) பகந்தரமாகின்றது. உட்புறத்தில் மாத்திரம் புரை ஏற்பட்டு வெளிப்பக்கத்தில் துவாரமேற்படாமலிருக்கலாம் (Internal Rectal Sinus or Blind Internal Fistula). வெளிப்புறத்தில் புரை ஏற்பட்டு உட்புறம் புரைத்துவாரம் ஏற்படாமலிருக்கலாம் (External Rectal Sinus or Blind External Fistula), உள்பக்கமோ வெளிப்பக்கமோ ஏற்பட்ட விரத்தி (கட்டிச்சிரங்கு) தான் இதற்குக் காரணம். இந்தப் புரை சரியாகச் செய்யாமலிருந்தால் பூர்ண பகந்தரமாவதும் உண்டு.

சிகித்ஸை. பகந்தர ஆரம்பத்திலேயே கஷாயங்களால் ஸேசனம், வெதுப்பித்தல், ரத்தத்தை வெளியாக்குதல் முதலியவை செய்து கட்டி பழுக்காதவாறும் உடையாதவாறும் பார்த்துக்

கொள்ள வேண்டும். பழுத்து உடையும் போதும் இவ்வியாதி கடுமையாகின்றது.

பகந்தரக்கட்டி கிளம்பியவுடனேயே சுக்கு ஆலிலை மூக்கரட்டைவேர் பழைய செங்கல் தூள் இந்த நான்கையும் ஜலம் விட்டு நன்கரைத்து தினமும் 3. 4 தடவை தடவி வர கட்டி பழுக்காமல் அமுங்கிக் கரைந்து விடும்.

பிச்சி இலை, ஆலம் துளிர், பச்சை சிந்திற்கொடி, சுக்கு, இந்துப்பு இவைகளை மோர்த் தெளிவு விட்டு அரைத்து அடிக்கடி தடவி வர கட்டிகள் அமுங்கும்.

மாசிக்காய், மிளகு, அபின், திராக்ஷை இவைகளை ஜலம் விட்டு நன்கு அரைத்து அடிக்கடி தடவி வர கட்டிகள் அமுங்கிக் கரையும். பழுத்து உடைந்த கட்டிகளிலும் முளை சீக்கிரம் வெளியாகி புண் சுத்தமாகக் காயும்.

வேப்பிலை, கருப்பு எள், மஞ்சள், கடுக்காய், மரமஞ்சள், சிற்றுமுட்டி வேர், ஒட்டடை வகைக்கு ஒரு தோலா, வெள்ளை லோத்திரப்பட்டை 2 தோலா, இவைகளை ஜலம் விட்டரைத்துச் சுட வைத்துப் பத்துப் போடவும் இதனால் புண் ஆறி தூர்ந்து விடும். வலியும் குறையும்.

பகந்தரத்தின் புரை பூர்ணமாகி யிருந்தால் க்ஷார நூல் கொண்டு அதை அறுக்க வேண்டும். பகந்தரத்தின் வெளி வாயை கார்பாலிக் ஆஸிட் கொண்டு சுடவேண்டும், பின் வளைவு ஊசி (Fistula needle)யை புரையின் உள் செலுத்தி ஆஸன வழி வெளியே விரல் கொண்டு வெளிக் கொணர வேண்டும். பிறகு ஸ்பிரிட் கொண்டோ வேறு வகையிலோ சுத்தி செய்த கெட்டியான பட்டுக்கயிறை ஊசியின் காதில் செலுத்தி ஊசியை வெளியே எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அந்த இடத்தில் உணர்ச்சியற்றுப் போக ப்ரொகைன் 2% அல்லது நொவர்கைன் 2% இஞ்செக்ஷனோ அல்லது காவீரஸத்வம் 1/12 கிரைனும் அஜாசிருங்கீஸத்வம் 1/6 கிரைனும் கலந்த லோஷனின் இஞ்செக்ஷனோ செய்யவேண்டும். நன்கு உணர்வற்றுப்போனதும், புரையினுட் செலுத்திய நூலில் லிக்கர் பொடாஸி ஹைட்ராக்ஸைட் நனைத்து நூலின் இரு நுனிகளையும் பிடித்துக் கொண்டு ரம்பம் போலறுக்க ரத்தம் வெளியாகாமல் புண் அறுபடும். பிறகு புண்ணை புளித்த மோர் அல்லது காடி விட்டு அலம்பி த்துடைத்து கொம்பரக்குத் திரவத்தை சீலைத்துணியில் (Gauze) நனைத்துக் கட்டவும்.

கொம்பரக்கை நன்றாக இடித்துத் துணியில் சலித்து ஒரு தோலா எடுத்து 2 அவுன்ஸ் ஸ்பிரிட்டில் கரைத்துக் குலுக்க கொம்பரக்குத் திரவம் தயாராகும். இதில் உள்ள கொம்பரக்கு துணியைப் புண்ணில் ஒட்டுகின்றது. இதில் நனைத்த துணியை 12 மணிநேரம் கட்டி வைத்திருந்த பின்னர் ஏதாவது ஒரு எண்ணெய்யில் துணி அல்லது பஞ்சால் துடைக்க இது விட்டு விடும். அதிலுள்ள முளையை எடுக்க துரிசைச் சுட்டு ஜலம் விட்டு அரைத்து புண்மேல் கெட்டியாகப் பற்றுப் போட்டு 15 நிமிஷங்கள் வைத்திருந்து பிறகு தயிர் தெளிவல்லது காடி விட்டலம்பிவிடவும். மூல நோயில் உபயோகமாகும் களிம்பை உள் தடவி கட்டுப் போடவும். புண்ணை தினமும் 2 தடவை வேப்பிலை கஷாயம் விட்டலம்பவும். பிறகு சிகப்பு களிம்பு போட்டுக் கட்டிவர ஒரு மாதத்திற்குள் நன்கு குணமாகும்

சிகப்புக் களிம்பு. ஸங்க்ஜராஹத் (வெண்ணெய்கல்) லிங்கம் பச்சைக்கர்பூரம். மிருதார்சிங்கு. துத்தநாக மலர், (துத்தநாகத்தை உருக்கிப் பூக்கும்படி செய்தது அல்லது ஸிங்க் ஆக்ஸைட்) படிக்காரம், ஈயச்செந்தூரம், வெங்காரம் வகைக்குக் கால் தோலா, வீரம், அரைக்கால் தோலா, நூறுதடவை அலம்பிய (சததௌத) நெய் 5 தோலா, இவைகளில் சரக்குகளை நன்கு அரைத்துக் கொண்ட பின்னர் நெய் சேர்த்தரைத்துக் களிம்பு தயார் செய்து கொள்ளவும். இது தான் சிகப்புக் களிம்பு.

இவ்வித சிகித்ஸையில் ஒரு விசேஷ லாபமுண்டு. நவீன முறையில் பவுத்திர ஆபரேஷன் செய்தவருக்கு 4 நாள் வரை மல விஸர்ஜனம் செய்யக் கூடாதென்றும் படுத்துக்கொண்டே இருக்க வேண்டுமென்றும் நிர்பந்தமுண்டு. இதில் தினம் 2 தடவை மல சுத்தியாகுமாறு மருந்து கொடுக்கிறோம். நோயாளி நடக்கலாம். படுத்துக் கொண்டே இருக்க வேண்டியதில்லை. நவீன சிகித்ஸையில் இந் நோய் திரும்ப வரலாம். இதில் திரும்ப வராது.

பிப்பல்யாதி குக்குலு ¼ தோலா அளவு தினம் 2 வேளை சாப்பிட புண் சீக்ரம் ஆறுகிறது. நிம்ப பஞ்சாங்க சூர்ணம் ½ தோலா அளவு கதிராதி கஷாயத்துடன் தினம் 2 தடவை சாப்பிட வேண்டும். நாராயணரஸத்தை 15 யவ அளவு தினம் 2 வேளை பாலுடன் சாப்பிட வேண்டும்.

பிப்பல்யாதி குக்குலு. திப்பிலி, கடுக்காய்தோல், தானிக்காய் தோல், நெல்லி முள்ளி இவை வகைக்கு ஒரு பங்கு, சுத்தி செய்த

குக்குலு 5 தோலா - இவைகளைச் சேர்த்து இடித்து மாத்திரை செய்து கொள்ளவும்

நிம்ப பஞ்சாங்க சூர்ணம். வேம்பின் இலை பட்டை. காய், பூ. வேர் இவை ஸமஅளவு சேர்த்துச் சூர்ணம் செய்து கொள்ளவும்.

கதிராதி கஷாயம். காசுக்கட்டி. திரிபலா சூர்ணம் இவைகளைக் கஷாயம் செய்து எருமை நெய் விட்டு வாய் விளங்க அரிசித்தூள் மேமபொடியாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும.

* **நாராயண ரஸம்.** லிங்கம், படிக்காரம், ரஸாஞ்சனம், மனோசிலை, சிறு நாகப்பூ. ரஸம், தாம்ர பஸ்மம், கந்தகம், அயபஸ்மம் இந்துப்பு, அதிவிடயம், சவ்யம், முக்காவேளை, வாய்விளங்கம, மஞ்சள். அரிசித்திப்பிலி, எருக்கின் வேர் மாவிலங்கம்பட்டை. வெள்ளைக் குங்கிலியம். கடுக்காய் தோல். இவைகளை இலுப்பெண்ணெய் விட்டரைத்து 15 யவ அளவிற்கு மாத்திரைகள் செய்து கொள்ளவும். இது நாடிவிரணம், ரத்தக்கெடுதி. கண்டமாலை. விசர்சிகா. துஷ்ட விரணம், காதில் சீழ். சிரோரோகம். கால் கை வெடிப்பு. பகந்தரம் இவைகளில் நல்லது.

சம்பா அரிசி, பயறு இவைகளின் கஞ்சி. பேய்ப்புடல், மூங்கில் முருங்கைகுறுத்து. இளம் முள்ளங்கி மேட்டுப் பிரதேசத்தில் வளரும் ஆடு முதலியவைகளின் மாம்ஸ ஸூப். நல்லெண்ணெய், கடுகெண்ணெய், கசப்புப்பண்டங்கள் நெய் தேன் இவை உணவில் சேர்க்கக் கூடியவை. தேகப்பயிற்சி. புணர்ச்சி, மல்யுத்தம், குதிரை. ஸைகிள் சவாரி இவைகளை ஒரு வருஷம் வரை தள்ளிவிட வேண்டும்.

★ ரஸாஞ்சனம், சிறுநாகப்பூ, இலுப்பெண்ணெய் இவைகளுக்குப் பதில் முறையே அன்னபேதி, குக்குலு, கடுகெண்ணெய் சேர்ப்பதுண்டு. மலையிலிருந்து வெட்டி எடுத்த படிக்காரம் தான் சேர்க்க வேண்டுமென்றும் அன்னபேதியையோ ரஸாஞ்சனத்தையோ சேர்க்க வேண்டியதில்லை என்றும் சிலர். இதற்கு விரண கஜாங்குசம் என்ற பெயருமுண்டு. — ஆசிரியர்

செய்திகள்:

நாட்டு வைத்ய முறைகளுக்கான மான்யங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட நாட்களில் ஆயுர்வேதம், சித்தம், யூனனி, ஹோமியோபதி என்ற நாட்டு முறைகளின் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய்களில் இது வரை ரூ. 53,13,712 செல விடப்பட்டுள்ளன. இந்தத் தொகை முக்கியமாக நாட்டுமுறைக் கல்லூரி களின் சிக்ஷைத்தர உயர்விற்காக அளிக்கப்படுகின்றது. ராஜ்ய ஸர்க்கார் கள் மூலம் நடத்தப் பெறும் கல்லூரிக்கும் அரசாங்கம் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட ஸ்தாபனங்களால் நடத்தப்பெறும் கல்லூரிக்கும் இந்த உதவி அளிக்கப்படுகின்றது. 1958-59 ஆண்டில் மத்ய சர்க்கார் ரூ. 20,55,000 ராஜ்ய அரசாங்கங்களுக்கு அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் 30 லக்ஷ ரூபாய்கள் அளிக்க ஏற்பாடாகியுள்ளது.

நாட்டு வைத்ய முறைகளில் தனிப்பட்டு ஆராய்ச்சி செய்யும் ஸ்தாபனங்கள், ஆராய்ச்சி வஸதியுடன் கூடிய கல்வி ஸ்தாபனங்கள், இவை களுக்கான மூலிகை முதலியவைகளைப் பயிர் செய்து ஆராய்ச்சிக்கு உதவும் ஸ்தாபனங்கள் இவைகளுக்கு இம்மான்யம் அளிக்கப்படுகின்றது.

* * * *

பயிற்சி பெறாத வைத்யர்கள் தொழில் நடத்தத் தடை

தகுந்த பயிற்சி பெறாமலும் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள் பெறாத வர்களும் வைத்யத்தொழில் புரியக் கூடாது, அவ்விதம் தொழில் புரிந்தால் முதல் குற்றத்திற்கு ரூபாய் ஆயிரமும் தொடர்ந்து புரியும் குற்றத்திற்கு ரூபாய் ஐயாயிரமும் அபராதம் போடவேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு புதிய சட்டம் மத்ய சர்க்காரின் சிந்தனையில் உள்ளதாகத் தெரிகிறது. தகுதியற்றவர்கள் வைத்யம் புரிவதைத் தடுக்கவும் வைத்யம் புரிந்தால் அவர் களுக்குக் கடும் தண்டனையளிப்பதன் மூலம் அவர்கள் மேலும் இதில் ஈடு படுவதைத் தடை செய்யவும் இந்த யோஜனை செய்யப்பட்டுள்ளது. ராஜ்ய ஸர்க்கார்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ராஜ்யசர்க்கார்கள் இதில் தம் தமது ராஜ்ய நிலைக்கேற்ப முக்யமான திருத்த யோசனைகளைத் தெரிவித்த தும் ஒரு மசோதா நகல் வெளியிடப்படும்.

* * * *

நூலாசிரியர்களுக்கு ரூ 2300 பரிசு.

உத்தரப் பிரதேசத்திலுள்ள ஆயுர்வேத திப்பி (யூனனி) அகாடமி ஹிந்தியிலோ ஸம்ஸ்கிருதத்திலோ உருதுவிலோ ஆங்கிலத்திலோ ஆயுர் வேதத்தில் அல்லது யூனனியில் உயர்ந்த நூல் எழுதுபவர்களுக்கு ரூ. 2300

பரிசாக அளிக்கும். 31—10—59க்குள் இந்தப் புத்தகங்கள் அகாடமிக்கு அனுப்பப் பெற வேண்டும். இவை 1958 ஜனவரிக்குப் பின்னர் வெளியிடப்பட்டவையாக இருக்க வேண்டும் புத்தகத்தின் 12 பிரதிகளைத் தனியாகவும் 3 பிரதிகளைத் தனியாகவும் சொந்த செலவில் President, Ayurvedic and Tibbi Academy. (Uttara Pradesh) Tulasi Das Marg, Lucknow—என்ற விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும். பரிசுத்திட்ட நியமங்களை மேற்கண்ட விலாஸத்திலிருந்து எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

* * * *

கிரீஷ்மருதுவின் உப்பு

கிரீஷ்ம ருதுவில் (கோடையின் இறுதி காலத்தில்) வியர்வை அதிகமாக வெளிப்படுவதால் உடலில் உள்ள உப்பின் அளவு மிகக் குறைந்து விடுவதால், அம்சுகாதம் (Sunstroke) போன்ற நோய்கள் ஏற்படுவதாக ஆராய்ந்து இந்திய பாதுகாப்பு (சேனை) ஆராய்ச்சி இலாகா உப்பு ரேஷனை இரண்டு பங்காக்குமாறு முன்னர் ஆலோசனை கூறியிருந்தது. அதன்படி பாதுகாப்புப் படைகளுக்கு உப்பு இரண்டு பங்கு கொடுக்கப்பட்டு வந்தது. ஆனல் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான டாக்டர் D. L. கோதாரி அவர்களது ஆராய்ச்சியின் பயனாக உடலுக்கு கோடை நாட்களில் விசேஷமாக உப்பு தேவைப் படும். — என்ற கருத்து விஞ்ஞான உண்மைகளுக்குப் புறம்பானது என்றும் உப்பை அதிகமாகச் சேர்ப்பதன் மூலம் கோடையில் ரத்த அமுக்கம் அதிகமாவது கண்கூடு என்றும் கண்டு பிடிக்கப்பட்டு தற்போது உப்பு ரேஷனைக் குறைக்க ஏற்பாடாகிறது.

* * * *

இந்திய ஸர்க்காரின் புதிய ஆலோசகர்.

இந்திய சர்க்காரின் ஆயுர்வேத இலாகாவிற்குப் புதிய ஆலோசகராக வித்யாமார்த்தண்ட, ஆயுர்வேதாலங்கார தர்மானந்த கேஸர்பானீ அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். கவிராஜ் ஸ்ரீபிரதாபஸிம்ஹ அவர்கள் இந்த பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் அவர் ஸ்தானத்தில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆயுர்வேதத்தில் ஆயுர்வேதாலங்கார பரீக்ஷையில் தேறிய பின் ஜர்மனியில் ம்யூனிக் யூனிவர்ஸிடியில் M. D., Ph. D, பரீக்ஷை

களிலும், பர்லினில் J. C. H. பரீக்ஷையிலும், வியன்னுவில் J .T. பரீக்ஷையிலும், ரோமில் T. D. D. பரீக்ஷையிலும் தேறிப் பட்டம் பெற்று ஜர்மனியின் ம்யூனிக் (Munich) விச்வவித்யாலயத்தில் ஆசிரியராகவும் வைத்யராகவும் சிறிது காலம் இருந்து பின்னர், இந்தியாவில் புவாலி T. B. ஸானடோரியத்தில் தலைமை வைத்யராகவும், லக்னோ ஸ்டேட் ஆயுர்வேத கலாசாலையில் பிரின்ஸிபாலாகவுமிருந்து, தற்போது ஜாம் நகரிலுள்ள குலாப் கும்வர்பா ஆயுர்வேதிக் ஸொஸைடியின் ஆயுர்வேத கலாசாலையில் பிரின்ஸிபாலாக இருந்து வருகிறார். இவர் மத்ய சர்க்காரின் ஆயுர்வேத இலாகாவில் ஆலோசகராக பதவி ஏற்கிறார். இவர் வெளி நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்ததும் இந்திய - (அலோபதி) மெடிகல் கவுன்ஸில் ஆயுர்வேதபட்டதாரியான இவர் அலோபதி டி. பி. ஸானடோரியத்தின் தலைவராக இருப்பது யுக்தமில்லை என்று இவர்மேல் நடவடிக்கை எடுத்து பதவியிலிருந்து நீக்கியதையும் பின்னர் நீதிமன்றத்தின் கட்டளைக்குப் பணிந்து இவரை ஏற்றதையும் வைத்ய சந்திரிகை வாசகர்கள் அறிவார்கள். இவரது நிர்வாஹ காலத்தில் அலோபதியினர் ஆயுர்வேதத்திற்கு இழைத்து வரும் கொடுமைகள் அகற்றப்படும் என எதிர்பார்க்கலாம். — (ந. நி.)

* * * *

ஸ்ரீ நாராயணன் நாயர் காலமனார்.

கேரள தேசத்தில் பிரஸித்த வைத்ய வித்வானும் அனுக்ரஹ மீமாம்ஸா என்ற ஜீவாணு தத்துவ ஆராய்ச்சி நூலையும் ஸுச்ருத ஸம்ஹிதைக்கு கேரள மொழியில் விரிவுரை எழுதியவருமான வைத்ய வாசஸ்பதி வடக்கே பாட நாராயணன் நாயர் அவர்கள் சென்ற 14—7—59 அன்று தமது 80-வது வயதில் தமது கிராமமான வடவனூரில் காலமானார் என்ற செய்தியை மிகவும் வருத்தத்துடன் வெளியிடுகிறோம். ஸம்ஸ்கிருதத்தில் நல்ல வ்யுத்பத்தியும் ஆயுர்வேதத்தில் சாஸ்திரரீதியில் தெளிந்த அறிவும் அவரது கட்டுரைகளிலும் நூல்களிலும் நன்கு புலப்படும். மஹாத்ம நிர்வாணம் என்ற ஸம்ஸ்கிருத நூலில் மகாத்மா காந்தியைப் பற்றியும் வந்தே மாதரம் என்ற ஸம்ஸ்கிருத நாடகத்தில் வங்காளத்தின் தேசியப் போராட்டத்தைப் பற்றியும் மிகவும் அழகாக எழுதியுள்ளார். பகவத்கீதைக்கு அவரது விரிவுரை மிகவும் போற்றப்படுகின்றது. ஆயுர்வேதம், வேதாந்தம் மற்றும் பலசாஸ்திரங்களில் மிகவும் உழைத்து அவ்வப்போது கட்டுரைகள் எழுதியுள்ளார். அவரது மறைவு வருந்தத்தக்கது.

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
312	गुह्यदेशः गुह्यं	குஹ்யதேசம் குஹ்யம்	ஆண் பெண் மர்மஸ்தானங்கள்	Private parts as axilla, Groin, pubes and anus.
313	गृध्रसी	கிருத்ரஸீ	தொடை நரம்பு	Sciatic Nerve
314	गोजिह्वा गोजिह्विका	கோஜிஹ்வா கோஜிஹ்விகா	நாக்கு, தொண்டையின் மேல் மூடி	Tongue, Epiglottis
315	गौरीसिरा	கௌரீஸிரா	அன்னரஸமெடுத்துச் செல்லும் குழாய்கள்	Lymphatic Vessels.
316	ग्रहणी	கிரஹணீ	குடல்சவ்வு, சிறுகுடல், சிறுகுடலின் ஆதியிலும் முடிவிலுமுள்ள கதவுகள்	Intestinal Mucosa, Small intestine Pyloric valve, Ileocecal valve.
317	ग्रहणीनाडी	கிரஹணீநாடி	சிறுகுடல் குழாய்	Intestinal tube.
318	ग्रीवा	கிரீவா	கழுத்து	Cervix & neck.
319	ग्रीवाधःसन्धिः	கிரீவாதஸ்ஸந்தி	கழுத்தின் கீழ் மார்பெலும்பும் தோளெலும்பும் சேருமிடம்	Sternoclavicular Joint
320	ग्रीवामूलं	கிரீவாமூலம்	தொண்டைக்குழி	Suprasternal Notch
321	ग्रीवावंशः	கிரீவாவம்சம்	கழுத்துப்புறமுள்ள முதுகுத் தண்டெலும்புகள்	Cervical Spine.

18878

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
322	घण्टिका	கண்டிகா	உள்நாக்கு	Uvula
323	घाटा	காடா	கழுத்தின் பின்புறம்	Nape of the neck
324	घुटिका घुण्टिका	குடிகா குண்டிகா	கணுக்கால் பூட்டின் இருபுறமுள்ள எலும்புகள்	Malleolus
325	घृतिका	கிருதிகா	மூளைச்சோறு	Brain matter.
326	घोणास्थीनि	கோணாஸ்தி	மூக்கெலும்பு	Nasal bones.
327	घ्राणं	க்ராணம்	மூக்கு, முகரும் கருவி. மூக்கின் முகரும் பாகம்	Nose, organ of smell, Olfactory area of the nose.
328	घ्राणमार्गः	கிராணமார்க்கம்	மூக்குத்துவாரம்	Nasal cavity
329	घ्राणमूलं	கிராணமூலம்	மூக்கின் மேல் பாகம் அல்லது உள்பாகம்	Upper part of the nasal cavity, Root of the nose.
330	चक्षुः	சக்ஷுஃ:	பார்வைப்புலன் கண்	Organ of vision, Eye
331	चरणः	சரணம்	கால்	Foot
332	चर्म	சர்ம	தோல்	Skin, Cutis
333	चर्मचेली	சர்மசேலீ	தோல்படலம்	Scale of the skin

ெந.		ஸம்ஸ்க்ருதப்பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
334	चित्तं	சித்தம்	மனம்	
335	चिपिटिका	சிபிடிகா	தோலின் மெல்லிய படலம்	Cutis.
336	चिबुकं	சிபுகம்	மோவாய்க்கட்டை	Chin, Mentum
337	चूचुकं	சூசுகம்	முலைக்காம்பு	Nipple, Papilla.
338	चूडास्थानं	சூடாஸ்தானம்	மயிர்வளரும் தலை பாகம்	Head
339	चेतः	சேதஸ்	மனம்	Mind or Psyche
340	चेतःस्थानं	சேதஸ்ஸ்தானம்	மூளை	Brain
341	चेतोवहमार्गः	சேதோவஹ-மார்க்கம்	மூளைக்கு வந்து சேர்வதும் மூளையிலிருந்து வெளிச்செல்வதுமான நரம்புகள்	Assaccition fibres and Projection fibres.
342	चेष्टावत्सन्धयः	சேஷ்டாவத்ஸந்தய:	அசையும் பூட்டுகள்	Diarthrodial Joints.
343	चेष्टावहस्रोतांसि	சேஷ்டாவஹ-ஸ்ரோதஸ்ஸுகள்	உடலின் அசைவை அளிக்கும் நரம்புகள்	Motor nerves
344	जघनकपालानि	ஜகன கபாலங்கள்	இடுப்பெலும்புகள்	Hip bones. Innominate bones.
345	जघनबहिर्भागः	ஜகனபஹிர்பாகம்	இடுப்பின் பின்புறம்	Dorsal surface of the Pelvis.

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
346	जघनं	ஜகனம்	குஹ்ய ப்ரதேசம்	Pudendum Pubis, Pelvis.
347	जंघा जंघाकाण्डं	ஜங்கா ஜங்காகாண்டம்	கால் கணுக்காலுக்கு மேலும் முழங்காலுக்குக் கீழுள்ள பாகம்	Leg. Crus.
348	जंघापिण्डिका	ஜங்காபிண்டிகா	காலிலுள்ள கெண்டைத் தசை	Calf. Sura.
349	जंघास्थिनी	ஜங்காஸ்திகள்	உள்வெளிக்கால் எலும்புகள்	Tibia & Fibula.
350	जठरं	ஜடரம்	வயிறு	Abdomen
351	जत्रु	ஜத்ரு	மார்பெலும்பும் அதன் கழுத்துப் புறமும்	Sternum, Manubrium Sterni.
352	जत्रुमूलं	ஜத்ருமுலம்	தொண்டைக்குழி	Suprasternal Nocth, Xiphisternal notch
353	जत्रुसन्धि	ஜத்ருஸந்தி	மார்பெலும்பும் தோள் எலும்பும் சேருமிடம்	Sternoclavicular Joints.
354	जरायु:	ஜராயு	கர்பத்தைச் சுற்றியுள்ள ஜவ்வு, வயிற்றில் குடலைச்சுற்றியுள்ள ஜவ்வு நஞ்சுப்பை,	Foetal membrane, Peritoneum, Placenta with foetal membrane.

சர்க்கராஸவம். சிறுகாஞ்சூரிவேர் 64 தோலா, கொடிவேலி வேர்பட்டை, ஆடாதோடைவேர், கடுக்காய் தோல். நெல்லி முள்ளி, வட்டத்திருப்பி, சுக்கு இவை வகைக்கு 8 தோலா இவைகளை இடித்து 12½ படி ஜலத்திலிட்டு 3⅛ படி மீதமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் சர்க்கரை 400 தோலா கலந்து கொள்ள வும். திப்பிலி, செவ்வியம், ஞாழல்பூ - இவைகளைத் தூள் செய்து தேன் நெய் விட்டுக் கலந்து பானையினுட்புறம் பூசிக் காய்ந்த பின் அதில் மேற்கூறிய திரவத்தைப் போட்டு சீலைமண் செய்து ஒரு மாதம் கழித்து எடுத்துக் கொள்ளவும். மூலம், கிர ஹணி, மலக்கட்டு, அரோசகம், மூத்திரக்கட்டு, ஏப்பம் தடைபடு தல், அக்னி மந்தம், ஹிருதய ரோகம், பாண்டு இவைகளைப் போக்கவல்லது.

திராக்ஷாஸவம். திராக்ஷை 400 தோலா, 25 படி ஜலத்தில் 6¼ படி மீதமாக காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். அதில் சர்க் கரை 400 தோலா, தேன் 400 தோலா, காட்டகத்திப்பூ 28 தோலா, ஜாதிக்காய், கிராம்பு, வால் மிளகு, மிளகு, சந்தனத் தூள், திப்பிலி, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, வகைக்கு 2 தோலா இவைகளின் சூர்ணம் கலந்து பானை யிலிட்டு மூடி வைத்து ஆஸவமான பின்னர் சாப்பிடவும். மூலம் சோஷம், அருசி, ஹிருதயரோகம், பாண்டுரோகம், ரத்தபித் தம், பகந்தரம், குல்மம், உதரம், கிருமி ரோகம், கிரந்தி, க்ஷதம், ஜ்வரம் இவைகளில் உதவக்கூடியது. வாதபித்தங்களைத் தணிக்க வல்லது. பலத்தையும் நிறத்தையும் அளிக்கும்.

ஸமசர்க்கர சூர்ணம். சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுநாகப்பூ, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, ஏலரிசி இவை முறையே 7, 6, 5, 4, 3, 2, 1 தோலா வீதம் எடுத்து சூர்ணித்து சர்க்கரை 28 தோலா சேர்த்துச் சாப்பிட மூலம், அக்னிமந்தம், குல்மம், உதரம், வீக்கம், பாண்டு முதலிய நோய்களில் நல்லது.

வ்யோஷாதி சூர்ணம். சுக்கு, திப்பிலி, மிளகு, கொடிவேலி வேர்பட்டை, சேங்கொட்டை, வாய்விளங்கம், எள்ளு, கடுக் காய் தோல் இவைகளின் சூர்ணத்தை சம அளவு வெல்லத் துடன் சேர்த்துச் சாப்பிட அர்சஸ், வீக்கம், இடுவிஷம், குஷ் டம், மலபந்தம் கிருமி பாண்டு இவை நீங்கும். [சூர்ணமாகத் தயாரிக்கும்போது சம அளவும், மோதகமாகத் தயாரிக்கும் போது 2 பங்கும் வெல்லம் சேர்க்கவேண்டும்]

வ்யோஷாதிவடீ. சுக்கு, திப்பிலி, மிளகு, திரிபலை, வாய் விளங்கம், எள்ளு, சேங்கொட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை இவைகளின் சூர்ணத்துடன் 2 பங்கு வெல்லம் சேர்த்து மோதக மாகத் தயாரித்துச் சாப்பிட மூலநோயும் தோலைப் பற்றிய நோயும் நீங்கும்.

சுக்கு, திப்பிலி, கடுக்காய்தோல், மாதுள விதை இவை களில் ஒன்றின் சூர்ணத்தை வெல்லத்துடன் ஆமம், அஜீர்ணம், அர்சஸ், மலபந்தம் இவைகளிருக்கும்போது சாப்பிட நல்லது. காட்டுக்கருணைக்கிழங்கு சூர்ணமும் சர்க்கரையும் அல்லது தேனும் வெண்ணெய்யும் சாப்பிட மூலம் தணியும். கோகம் பம் எனும் மங்குஸ்தான் வேரையும் இலையையும் சூர்ணித்து 8 தோலா, சேங்கொட்டை 4 தோலா, மிளகு 8 தோலா இவை களின் சூர்ணம் சாப்பிட நல்லது.

பாடாதி சூர்ணம். காஞ்சூரிவேர், வில்வப்பிஞ்சு, ஓமம், சுக்கு இவைகளில் ஏதாவது ஒன்றுடனே எல்லாவற்றுடனே வட்டத்திருப்பி சேர்த்து இடித்து சாப்பிட மூல வேதனை தீரும்.

நாயுருவி விதையை அரைத்து அரிசி கழுவிய ஜலத்தில் கரைத்துச் சாப்பிட ரத்த மூலம் நிற்கும். சந்தனத்தூள், நில வேம்பு, காஞ்சூரிவேர், சுக்கு இவைகளின் கஷாயமோ, மரமஞ் சள், லவங்கப்பட்டை, விலாமிச்சை, வேப்பம்பட்டை இவை களின் கஷாயமோ சாப்பிட நல்லது. மோரில் ஓமமும் சுக்கும் அரைத்துக் கலக்கிச் சாப்பிட மூலம் திரும்பாது. சித்திரமூலப் பட்டைத்தூளைப் போட்டு பாலில் புரை குத்தித் தயாரிக்கப் பெறும் மோரைச் சாப்பிட மூலம் கிளம்பாது. தினமும் அன்னத்துடனே தனித்தோ மோரையே உணவாகக் கொண்டு 7, 10, 15, 30 நாட்கள் இருத்தல் நல்லது. பலத்தையும் காலத் தையும் உணர்ந்து இந்த பத்தியத்தில் இருத்தல் நல்லது. மோரில் கடுக்காய்த் தூளையோ திரிபலையின் தூளையோ போட்டுச் சாப்பிடுதல் நல்லது. கொடிவேலி வேர்பட்டை, கொட்டக் கரந்தை வேர், பெருங்காயம் இவைகளின் சூர்ணத் தையோ மோரில் கலக்கி சாப்பிடலாம். கொடிவேலிவேர் பட்டையை அரைத்துப் பானையில் பூசி அதில் பாலை வைத்துத் தயாரித்த தயிரையும் கடைந்த மோரையும் சாப்பிடுவது நல்லது. நிலப்பனைக்கிழங்கு, கடுகுரோஹிணி, கொடிவேலி வேர் பட்டை இவைகளின் சூர்ணத்தை மோரில் கலந்து சாப் பிடுதல் நல்லது. பெருவாகைப்பட்டை, கொடிவேலிவேர்

பட்டை, வெட்பாலையரிசி, புங்கம்பட்டை, இந்துப்பு, சுக்கு இவைகளின் சூர்ணத்துடன் கலந்த மோர் ஒருவாரம் சாப்பிட மூலம் குணமடையும்

ஹபுஷாதி தக்ராரிஷ்டம். (மோர்காடி.) கொட்டக்கரந்தை, வெந்தயம், கொத்துமல்லி விதை, ஜீரகம், கருஞ்சீரகம், பூலாங் கிழங்கு, திப்பிலி, கண்டந்திப்பிலி, கொடிவேலிவேர்பட்டை, யானைத்திப்பிலி, ஓமம், குரோசாணி ஓமம் இவைகளின் சூர்ணத்தை மோரில் கரைத்துப் பானையிலிட்டு மூடிவைத் திருந்து நன்கு புளிப்பும் காரமும் ஏற்பட்டதும் வடிகட்டி, சாப் பிடும்போதும் நீர் அருந்தும் போதும் சாப்பிட அக்னிமந்தம், அரோசகம், கபவாதத் தடை, மூலம், வீக்கம், அரிப்பு இவை களில் நல்லது. பலம் தர வல்லது.

சவ்யாதி கிருதம். செவ்வியம், சுக்கு, திப்பிலி, மிளகு, வட்டத்திருப்பி, யவக்ஷாரம், கொத்துமல்லிவிதை, ஓமம், கண்டந்திப்பிலி, கந்தகவெடியுப்பு, இந்துப்பு, கொடிவேலிவேர் பட்டை, வில்வப்பசை, கடுக்காய்த்தோல் இவை வகைக்கு 2¾ தோலா இடித்துக் கல்கமாக்கி 160 தோலா நெய்யில் கலக்கி ஜலம் 4 படி சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி சாப்பிட்டு வர, மல மும் வாயுவும் கட்டாமல் பிரியும். பிரவாஹிகா, குதம் தள்ளு தல், மூத்ர கிருச்சிரம், குதவலி, கவுட்டிவலி இவைகளைப் போக்கும்.

சுண்டீ கிருதம். சுக்கு 120 தோலா இடித்து 6¼ படி ஜலத்தி விட்டுக் கஷாயம் கால் பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி நெய் 64 தோலா சேர்த்து சுக்கு 16 தோலா கல்கமாக அரைத்துக் கலக்கி நெய் தயாரித்து சாப்பிட அர்சஸ், ச்வாஸம், காஸம், மண்ணீரல் பெருக்கம். பாண்டு, விஷமஜ்வரம், தாகம், அரோ சகம் இவை நீங்கும். கல்கமாக மாத்திரம் சுக்கைச் சேர்த்து 4 பங்கு ஜலம் சேர்த்துத் தயாரித்த நெய் பஸ்தி (மூத்திரப்பை) வயிறு இவ்விடத்தில் ஏற்படும் நோய்களில் நல்லது.

லகுசவ்யாதி கிருதம். செவ்வியம், கடுகுரோகிணி, வெட் பாலையரிசி, சதகுப்பை, ஐந்துப்புகள் இவைகளைக் கல்கமாக அரைத்துக் கலக்கித் தயாரித்த நெய், அர்சஸ், கிரஹணீ இவை களில் நல்லது.

ஸ்ரீபேராதி கிருதம். வெட்டிவேர், நீலோத்பலக்கிழங்கு, லோத்திரப்பட்டை, மஞ்சிட்டி, செவ்யம், செஞ்சந்தனம்.

வட்டத்திருப்பி, அதிவிடயம், வில்வப்பிஞ்சு, காட்டகத்திப்பூ, தேவதாரு, மரமஞ்சள். லவங்கப்பட்டை, சுக்கு, ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு யவக்ஷாரம். கொடிவேலிவேர் பட்டை இவைகளின் கல்கம் 1 பங்கு. நெய் 4 பங்கு, புளியாரைக்கீரைச்சாறு 4 பங்கு இவைகளை முறைப்படி காய்ச்சி நெய் வடிகட்டிச் சாப்பிட மூலம். அதிஸாரம், கிரஹணீ, பாண்டு, ஜ்வரம், அருசி, மூத்திர கிருச்சிரம், குதம் தள்ளுதல். மூத்திரப்பை நோய்கள், வயிற்று உப்புசம், பிரவாஹிகை. சீதம் போதல் இவைகளில் நல்லது.

லேபங்கள். எருக்கம்பால். கள்ளித்தண்டு, பேய் சுரைத் துளிர், புங்கம் விதை இவைகளை ஆட்டு மூத்திரத்தில் அரைத்துப் பூச நல்லது இந்துப்பு, தேவதாளிப்பீர்க்கின் விதை இவைகளைக் காடிவிட்டரைத்துப் பூசலாம். திப்பிலி, வாகை விதை, எருக்கம்பால், கள்ளித்தண்டு, இந்துப்பு இவைகளையோ, கள்ளித்தண்டும் இந்துப்பும் தவிர மற்றவைகளையோ, மஞ்சள், கரடிமலம், குந்துமணி, திப்பிலி, பசுவின் மூத்திரம் இவைகளையோ அரைத்துப் பூசலாம். வாலுளுவை விதையை அரைத்துப் பூச, ரத்த மூலம் குறையும். பேய்ப்பீர்க்கின் சூர்ணத்தை மேல் வைத்துத் தேய்க்க மூலம் குறையும். மஞ்சளையும் பேய்ப்பீர்க்கின் சூர்ணத்தையும் கள்ளிப்பால் இந்துப்பு. கள்ளிப்பால் கோமூத்திரம் சேர்த்தரைத்துப் பூசலாம்.

லேபங்கள். (பை. ர.) கபார்சவில் மூலமூளையின் ஒரு ஓரத்தில் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தி கள்ளிப்பாலைத் தடவலாம். அல்லது க்ஷாரத்தாலோ சூட்டுக்கோலாலோ சுடலாம். மஞ்சளையும் பேய்ப் பீர்க்கின் தூளையும் கடுகெண்ணெய் விட்டரைத்துப் பூசலாம். திப்பிலி, இந்துப்பு, கோஷ்டம், வாகை விதை இவைகளை கள்ளிப்பால் விட்டரைத்துப் பூசலாம். காட்டுக்கருணைக்கிழங்கு, மஞ்சள், கொடிவேலிவேர்பட்டை, வெங்காரம், வெல்லம் இவைகளைக் காடிவிட்டரைத்துப் பூச நல்லது. வாகை விதை, கோஷ்டம், எருக்கம் பால், திப்பிலி, இந்துப்பு இவைகளையோ, கலப்பைக் கிழங்கு ஸர்ஜக்ஷாரம் கொடிவேலி வேர் பட்டை தந்திமூலம் கோமூத்திரம் இவைகளையோ, கோழிமலம், குந்துமணி, மஞ்சள், திப்பிலி இவைகளையோ அரைத்துப் பூச நல்லது. பேய்ச்சுரைவிதை வெடியுப்பு இவைகளைக் காடி விட்டரைத்து சிறு வத்திகளாகச் செய்து குதத் துவாரத்தில் வைத்திருந்து தயிரன்னம் மாத்திரம் சாப்பிட - மூன்று நாட்கள் வைத்திருக்க நல்லது.

188878
சென்னை-600 008.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அமுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை : 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.

MUSK MERCHANTS.

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால் இனாமாக அனுப்பப் பெறும்.

"மார்தண்ட"வின் ஆயுர்வேத இஞ்சக்ஷன்களும் ரஸம், ரஸாயனம், ஆஸவாரிஷ்ட முதலிய மருந்துகளும்.

படௌத் மார்தண்ட பார்மக்யூடிகல்ஸ் என்னும் வைத்யசாலை சம சீதோஷ்ண வசதி நவீன இயந்த்ரம் முதலியவை நிறைந்தது. இங்கு அரசாங்க அனுமதிபெற்று தகுதிவாய்ந்த ரஸாயனிகளின் சிறந்த மேற்பார்வையில் 17வகை ஊசிமருந்துகள் (இஞ்சக்ஷன்கள்) தயாரிக்கப்படுகின்றன. அவைகள் உடனே குணமளிப்பதுடன் எவ்வித அபாயமுமில்லாதவை என உறுதி கூறுகிறோம். இவைகளுடன் சிறந்த அனுபவம் பெற்ற இரண்டு ஆயுர்வேதாசார்யர்களின் மேற்பார்வையில் சாஸ்த்ரீய முறை தவறாது கூபீபக்வ ரஸங்கள், ரஸாயனங்கள், பஸ்மங்கள், சூர்ணங்கள் இயந்திர மூலமாக தயாரிக்கப்பெறுகின்றன. வெல்லத்துக்குப்பதில் சர்க்கரை சேர்க்கப்பெற்று நீடித்து நிற்கக்கூடியதும், குணமளிக்கக் கூடியதுமான ஆஸவங்கள். கஷாய சத்துக்கள் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன.

மார்த்தண்டவின் படங்களடங்கிய பெரிய விலை ஜாப்தாவுக்கும் மருந்துகளுக்கும் எழுதுங்கள், கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவேண்டும்.

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

MARTAND PHARMACEUTICALS.

(Research Institute of Indian Medicines)

BARAUT S. S Rly, (U. P.)

தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

லேட்டிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.

தபால் பெட்டி நெ. 907. **போன் நெ. 71628.**

ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன்
G. ஸ்ரீனிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.

வைஸ்பிரஸிடெண்ட் :—
டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :— ரூ. 100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20,000 பங்குகள் கொண்டது)

வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை ...	ரூ.	84,735
சங்கத்தின் க்ஷேம நிதி ...	ரூ.	2,46,709
கட்டடநிதி ...	ரூ.	1,55,402
மற்ற நிதிகள் ...	ரூ.	2,75,016

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசீய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5—00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசீய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்கமேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசீய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்.

— எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னுவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தபார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனானி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

கிளை அலுவலகங்கள் :—

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா—2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு, பெங்களூர்—2. (மைசூர் ராஜ்யம்.)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம், கல்லை ரோடு, கோழிக்கோடு—2. (கேரள ராஜ்யம்.)

(4) நகர விற்பனை டிப்போ, 4/186, மவுண்ட் ரோடு, மதராஸ்—2 டெலிபோன் நெ. 86520.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

“சக்தி ஸஞ்ஜீவி”

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம் எங்கும் கிடைக்கும்.

❋

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலா,

கரூர். (S. Ry.)

Printed at the Srivilasam Press, Srirangam and Published by S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam, Bharat Ayurveda Sala, 27, Chinnakadai Street, Teppakulam, Tiruchy
Editor: S. M. Sundararajacharya, Srirangam.